செய்தி வெளியீடு எண்.950 நாள்.5.11.2008

2008ம் ஆண்டு கோ–ஆப்டெக்ஸின் தீபாவளி விற்பனை 18.09.2008 அன்று தொடங்கி 01.11.2008 வரை நடைபெற்றது. தீபாவளியை முன்னிட்டு விற்பனைக் குறியீடாக ரூ.60.00 கோடி நிர்ணயம் செய்யப்பட்டது. பேரறிஞர் அண்ணாவின் நூற்றாண்டை முன்னிட்டு தமிழக அரசு பட்டு மற்றும் பருத்தி இரகங்களுக்கு 30 சதவிகிதம் தள்ளுபடியும், ஆயத்த ஆடைகள் மற்றும் விசைத்தறி இரகங்களுக்கு 20 சதவிகிதம் தள்ளுபடியும் வழங்கியது. இந்த ஆண்டு தீபாவளி பண்டிகையின்போது, தமிழக நிறுவனமான கோ–ஆப்டெக்ஸிற்கு இந்திய அளவில் அதன் விற்பனை நிலையங்களுக்கு சுமார் 9,52,725 வாடிக்கையாளர்கள் வருகை புரிந்துள்ளனர். இது சென்ற ஆண்டைக்காட்டிலும் சுமார் 20 சதவிகிதம் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த தீபாவளி பண்டிகை காலத்தில் 14 கண்காட்சிகளும், 65 விரிவாக்க விற்பனை நிலையங்களும் நடத்தப்பட்டது. சென்ற வருடத்தில் 01.10.2007 முதல் 14.11.2007 வரை நடைபெற்ற தீபாவளி சிறப்பு விற்பனை ரூ.50.40 கோடியாகும். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால், இந்த ஆண்டு தீபாவளி சிறப்பு விற்பனை ரூ.62.00 கோடியாகும். இது கடந்த ஆண்டின் தீபாவளி விற்பனையை விட சுமார் 24 சதவிகிதம் அதிகம் என மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு, சென்னை–9.